JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| CC.No. | 64/2025 | Crime No. | 30/2024 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-4-சம்பத்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ஆப்பக்கூடல், புதுப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் நான் கரட்டூர் மேடு அருகே சென்று கொண்டிருந்தபோது அங்கு போலீசார் இருந்தார்கள். கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோது இரண்டு பேர் ஆட்டை திருடி வந்ததாக சொல்லி ஆடு மற்றும் பைக்கினை அந்த இரண்டு பேரிடமிருந்து போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். பின்னர் என்னிடம் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி மதியழகன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **எதிரி மதியழகன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் ஆடு மற்றும் பைக்கை போலீசார் எடுத்துச் சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆட்டை தான் போலீசார் அன்று பிடித்து வைத்திருந்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வண்டி தான் அன்று போலீசார் பிடித்து வண்டியாகும். அந்த வண்டிக்கான புகைப்படம் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.04 06:25:29 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாள்களில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் கையொப்பம் செய்த தாளை போலீசார் என்னிடம் படித்துக் காண்பிக்கவில்லை என்றால், . நானும் படித்து பார்க்கவில்லை. நான் கையொப்பம் அனைத்தையும் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால், சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த ஆடும் கைப்பற்றவில்லை என்றாலும், போலீசார் என்னிடம் புகைப்படம் காண்பித்து அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும் என்றால், சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், இந்த வழக்கின் புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்ம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.04 06:25:35 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani